செய்தி வெளியீடு எண்.17 நாள்.07.01.2017

**பத்திரிக்கைச் செய்தி**

# திருவள்ளூர் மாவட்டத்தில் 12 இடங்களில் ஆதார் உதவி மையங்கள் 28.12.2016 முதல் 28.02.2017 வரை செயல்படும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப.,அவர்கள், தகவல்

~~~~~

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 12 வட்டாட்சியர் அலுவலகங்களில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் மூலமாகவும் 5 நகராட்சி அலுவலகங்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் **ELCOT** மூலமாகவும் ஆக மொத்தம் 18 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் அமைக்கப்பட்டு 01.10.2016 முதல் முழுவீச்சில் இயங்கி வருகின்றன. மேற்கூறிய நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் வாயிலாக 1.10.2016 முதல் ஆதார் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆதார் பதிவிற்கென கட்டணம் ஏதுமில்லை. இது ஒரு கட்டணமில்லா சேவையாகும்.

ஆதார் சேர்க்கைக்கு பதிவு செய்து ஆதார் எண் அல்லது ஆதாார் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் மீண்டும் மீண்டும் நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்களுக்கு சென்று பதிவு செய்வதால் இம்மையங்களுக்கு அதிக அளவில் பொது மக்கள் வருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே ஆதார் எண்ணிற்கென பதிவு செய்து இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் வாயிலாக ஆதார் எண் வழங்கப் பெற்றவர்கள், ஒரு முறைக்கு மேல் எத்தனை முறை மீண்டும் மீண்டும் பதிவு செய்தாலும் புதிய ஆதார் எண் பெற இயலாது. இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் மென்பொருள் அந்த பதிவுகளை நிராகரித்துவிடும். எனவே, ஆதார் எண் பெறுவதற்கு ஒரு முறை பதிவு செய்தாலே போதுமானதாகும்.

ஆதார் அட்டைக்கு பதிவு செய்து ஆதார் எண் அல்லது ஆதார் அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் மற்றும் ஆதார் அட்டையை தொலைத்தவர்கள் தங்களது ஆதார் எண்ணை தெரிந்து கொள்ள ஏதுவாக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் மூலமாக தற்போது ஆதார் உதவி மையங்களை திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து 12 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டு கடந்த 28.12.2016 முதல் முழுவீச்சில் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் 28.12.2016 முதல் 28.02.2017 வரை மட்டுமே செயல்படும்.

இந்த ஆதார் உதவி மையங்களில், ஆதார் எண்ணிற்கு ஏற்கனவே பதிவுகளை செய்துவிட்டு ஆதார் எண் / ஆதார் அட்டை கிடைக்கப்பெறாத பொதுமக்கள் மற்றும் ஆதார் அட்டையை தொலைத்தவர்கள் **நேரில் சென்று** தங்களது பெயர், பிறந்த தேதி, அஞ்சல் குறியீடு எண், கை விரல் ரேகை மற்றும் கருவிழிகளைப் பதிவு செய்து, **சில விநாடிகளில் தங்களின் ஆதார் எண்ணை அறிந்து கொள்ளலாம்.**

மேற்கூறிய வழிமுறையில் கிடைத்த ஆதார் எண்ணை ஆதார் உதவி மையங்களின் அருகாமையிலேயே இயங்கும் அரசு இ-சேவை மையங்களில் காண்பித்து, விரல்ரேகை / கருவிழியினைப் பதிவு செய்து ரூ.30/- மட்டும் அரசு கட்டணம் செலுத்தி கைக்கு அடக்கமான பிளாஸ்டிக் ஆதார் அட்டையாகவோ அல்லது ரூ.10/- மட்டும் அரசு கட்டணம் செலுத்தி காகிதத்தில் அச்சிட்டோ பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, ஆதார் எண்ணிற்கு ஒரு முறை பதிவு செய்தவர்கள் திரும்ப திரும்ப நிரந்தர ஆதார் பதிவு மையத்திற்கு செல்லத் தேவையில்லை என்றும் மேற்காணும் ஆதார் உதவி மையங்களை அணுகலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப.,அவர்கள், தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~